படவில்லையென்று. மாதத்திற்கு பத்து நாட்களுக்கு விளக்குகள் எரியவில்லையென்று புகார் வந்தால், அதுபற்றி கட்டணம் குறைத்துக்கொள்ளப்படும்.

Report of National Commission on Labour

* 368 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) Whether the Government are aware of the report of the National Labour Commission presented to the Union Government; and

(*b*) if so, whether a copy of the report will be placed on the Table of the House ?

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன்: (அ) ஆம். மேற்கண்ட தொழிலாளர் பற்றிய தேசிய ஆணைக்குழுவின் அறிக்கையை ஆய்வதற்கு டில்லியில் நடந்த தொழிலாளர் அமைச்சர்கள் மாநாட்டில் நானும் பங்குகொண்டு நம் அரசாங்கத்தின் பரிந்துரைகளைக் கூறியிருக்கிறேன்.

(இ) இவ்வறிக்கை ஐந்நூறுக்கும் மேற்கொண்ட பக்கங்களைக் கொண்டதாக இருப்பதால் அவையின் முன் வைக்க இயலவில்லை. உறுப்பினர்களின் பார்வைக்காக சில நகல்கள் சட்டப் பேரவையின் நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளன.

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர்: தலைவர் அவர்களே, இந்தக் கமிஷனுடைய அறிக்கை டேபுளின்மேல் வைக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன்: தலைவர் அவர்களே, நான் முன்பு சொன்னதுபோல இந்த அறிக்கை 500 பக்கங்களைக் கொண்டதாக இருக்கிறது. இந்த அறிக்கையை மத்திய அரசாங்கம் வெளியிட்டிருக்கிறது. நம்முடைய மாநிலத்திற்கு சில பிரதிகள் பெறப்பட்டிருக்கின்றன. முப்பத்து நான்கு லட்சம் ரூபாய் செலவில் மூன்று ஆண்டுகள் முயன்று தயாரிக்கப்பட்ட அறிக்கை. இது பெரிய அளவில் இருப்பதாலும், அதிக பக்கங்களைக் கொண்டதாக இருப்பதாலும் அவை முன் வைக்க சாத்தியம் இல்லை. சட்டப் பேரவையின் நூலகத்தில் பேரவை உறுப்பினர்களுடைய பார்வைக்காக வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. வி. கே. கோதண்டராமன்: தலைவர் அவர்களே, அந்த அறிக்கை எல்லோருக்குமே மேஜைமேல் வைக்க முடியவில்லையென்றாலும், கட்சி அடிப்படையிலாவது இரண்டு புத்தகங்களாவது கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன்: தலைவர் அவர்களே, இந்தப் புத்தகம் மத்திய அரசாங்கத்தின் தொழிலாளர் துறை வெளியிட்டிருக்கிறது. நம்முடைய மாநிலத்திற்கென்று சில பிரதிகள்தான் அனுப்பியிருக்கிறார்கள். ஆகவேதான் பேரவை உறுப்பினர்களின் பார்வைக்காக சட்டப் பேரவை நூலகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது.

1970 மார்ச் 13]

திரு. நா. காசிராமன் : தலைவர் அவர்களே, மேஜைமேல் வைக்க முடியவில்லையென்றாலும்கூட, விலைக்குக் கேட்டால், கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கத்தின் தொழிலாளர் துறை இதை வெளியிட்டிருக்கிறது. நாம் வெளியிடவில்லை.

THIRU K. VINAYAKAM : Sir, may I know what are the salient features or recommendations of this Commission affecting Madras Labour ?

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னேன். இதில் இருக்கிற பரிந்துரைகள் நாம் ஏற்கனவே நம் மாநிலத்தில் செயல்படுத்தி வருகிறோம். புதிதாக எந்தவிதமான யோசனைகளும் சொல்லப்படவில்லை. மற்றும் மாநாட்டில் கலந்துகொண்ட எல்லா தொழிலாளர் நல அமைச்சர்களும் அதிகாரிகளும் தீவிரமாக ஆலோசிக்கவில்லை. பிரதம நீதிபதியாக இருந்து ஓய்வுபெற்ற டாக்டர் கஜேந்திர கட்கர் என்பவரைத் தலைமையாகக் கொண்டு மூன்று ஆண்டுகள் முயன்று தயாரிக்கப்பட்டது. இந்தக் குழுவிலே நியமிக்கப்பட்ட உறுப்பினர்களில் பலர் ராஜினாமா செய்துவிட்டார்கள். சிலர் இறந்துவிட்டார்கள். மாநாடு நடைபெற்ற நேரத்திலே மத்திய தொழிலாளர் நல அமைச்சர் ஜெய் சுக்லால் ஹாத்தி என்பவர் எந்த முடிவும் எடுக்காமல் ராஜினாமா செய்துவிட்டுப் போய்விட்டார். மாநாடு எந்தவிதமான முடிவும் எடுக்காமல் கலைந்துவிட்டது.

திரு. சி. கோவிந்தராசன் : தலைவர் அவர்களே, பழைய மத்திய தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் இப்போது இல்லையென்பதாலும், பல உறுப்பினர்கள் அந்தக் குழுவிலிருந்து ராஜினாமா செய்துவிட்டார்கள் என்ற காரணத்தாலும் தேசிய தொழிலாளர் ஆணைக் குழுவின் பரிந்துரைகளைப்பற்றி நம்முடைய அரசாங்கம் கவலைப்படவில்லை யென்பதாகத் தெரிகிறதே, அது உண்மையா ?

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, நான் பெருமையோடு சொல்லிக்கொள்வதற்கு விரும்புகிறேன். தேசிய தொழிலாளர் ஆணைக்குழு எதை எதை வற்புறுத்திக் கூறுகிறதோ அவற்றையெல்லாம் நாம் நடைமுறைப்படுத்தி முன்பிருந்தே செய்துவருகிறோம். தொழிலாளர்களுக்குத் தேவைப்படும் எல்லாவற்றையும் நாம் செயல் படுத்தி வருகிறோம். உறுப்பினர் அவர்கள் அந்த அறிக்கையைப் படித்துப்பார்த்தால் முழுவதும் தெரியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]